# கேடுகெட்ட ஆட்சிக்கு புகைப்படமே சாட்சி!



மதுரை, ஆனையூர் கூடல் புதூரைச் சேர்ந்த 11ம் வகுப்பு மாணவர் தமிழ்ச்செல்வன் மரணத்தை கொலை வழக்காக மாற்றக்கோரி கமிஷனர் அலுவலகத்தை முற்றுகையிடும் போராட்டம் நேற்று நடந்தது. இதில் பங்கேற்ற இளம்பெண்ணை தரதரவென இழுத்தும், மேலே அமர்ந்தும், இரு கால்களால் அப்பெண்ணின் முகத்தை இறுக்கியும் கைது செய்ய முயன்றனர். சாலையில் விழுந்த அவரை பெண் இன்ஸ்பெக்டர் உட்பட போலீசார் கொடூரமான முறையில் கை, கால்களை பிடித்து குண்டுக்கட்டாக தூக்கி சென்றனர்.

## மதுரையில் 11ஆம் வகுப்பு மாணவன் சடலமாக மீட்பு!

# த.வெ.க. ஆட்சியில் கொலைகளில் தமிழ்நாடு முதலிடம்!

### கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. குற்றச்சாட்டு!

சென்னை, செப். 16 -

பொறுப்பற்ற த.வெ.க. அரசில் தமிழ்நாடு கொலைகளில் முதலிடம் வகிப்பதாக கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. குற்றம் சாட்டியுள்ளார்.

மதுரை ஆனையூர் கூடல்புதூர் பகுதியைச் சேர்ந்த 11ம் வகுப்பு மாணவன் தமிழ்ச்செல்வனின் உடல் முட்புதர் குட்டை ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.



உடற்கூறு ஆய்வில் மாணவன் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதற்கான தடயங்கள் இருப்பதாகக் கூறப்படும் நிலையில், ஆரம்பத்திலிருந்தே காவல்துறையினர் இதை சந்தேக மரணம் என வழக்குப் பதிவு செய்து மெத்தனப் போக்குடன் செயல்படுவதாக உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக, வழக்கை கொலை வழக்காக மாற்ற வேண்டும், சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் மற்றும் சம்பந்தப்பட்ட விசாரணை அதிகாரியை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து "தமிழ்ச்செல்வன் நீதிக்கான கூட்டியக்கம்" சார்பில் மதுரை மாநகர காவல் ஆணையர் அலுவலகம் முற்றுகையிடப்பட்டது. காவல்துறையினர் தடுத்து நிறுத்தியதால் அழகர் கோவில் சாலையில் பொதுமக்கள் மற்றும் உறவினர்கள் தீவிர சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதால் அப்பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

போராட்டத்தைக் கலைக்க முற்பட்ட காவல்துறையினர், பெண்கள் உட்படப் பலரை வலுக்கட்டாயமாகத் தரதரவென இழுத்துச் சென்று கைது செய்தனர். குறிப்பாக, போராட்டத்தில் ஈடுபட்ட பெண் ஒருவரை காவல்துறை அதிகாரி கால்களால் மிதித்து அடக்க முயன்றதாகக் கூறப்படும் புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வெளியாகி பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்களிடையே பெரும் அதிர்ச்சியையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளன.

**கனிமொழி கருணாநிதி கண்டனம்!**

இந்தச் சம்பவத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும் எம்.பி.யுமான கனிமொழி கருணாநிதி அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு: -

தமிழ்நாட்டில் கொலைகள் நடைபெறாத நாளே இல்லை என்கிற அளவுக்கு சட்டம் - ஒழுங்கு சீர்கெட்டுக் கிடக்கிறது. ஒவ்வொரு நாளையும் அச்சத்துடனும் அதிர்ச்சியுடனும் மக்கள் கடந்து கொண்டிருக்கிறார்கள். கல்வியில் முதன்மை மாநிலமாக இருக்கும் தமிழ்நாட்டை, கொலைகளிலும் முதலிடத்திற்கு கொண்டு செல்லப் போகிறதா இந்தப் பொறுப்பற்ற அரசு?

சட்டம் ஒழுங்கில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலங்களில் ஒன்றாக இருந்த தமிழ்நாட்டின் நிலை இன்று எங்கே சென்று கொண்டிருக்கிறது? இது தான் த.வெ.க. சொன்ன மாற்றமா? என்று தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.

## திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# பேரறிஞர் அண்ணாவின் 118ஆம் ஆண்டு பிறந்த நாள் ஊர்வலம்!

### முன்னாள் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி – டாக்டர் எ.வ.வே.கம்பன் பங்கேற்பு!

திருவண்ணாமலை, செப். 16 -

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், பேரறிஞர் அண்ணா அவர்களின் 118ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா ஊர்வலம் நடைபெற்றது.

ஊர்வலத்தில் முன்னாள் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் மற்றும் கழக முன்னோடிகள் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

15.09.2026 - செவ்வாய்க்கிழமை காலை சரியாக 9.30 மணிக்கு, திருவண்ணாமலை, காந்தி சிலை அருகிலிருந்து, திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், பேரறிஞர் அண்ணா அவர்களின் 118வது பிறந்த விழா ஊர்வலம் நடைபெற்றது.

ஊர்வலத்தில் முன்னாள் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் மற்றும் கழக முன்னோடிகள் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாவட்டக் கழக அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஶ்ரீதரன், மாவட்ட துணைச் செயலாளர் மு.பெ.கிரி, மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணைச் செயலாளர்கள் ப்ரியா ப.விஜயரங்கன், விஜயலட்சுமி ரமேஷ், மாநில தொ.மு.ச., பேரவைச் செயலாளர் க.சௌந்தரராசன், மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் ஆகியோர் மலர்த்தூவி மரியாதை செலுத்தினர்.

துணை மேயர் சு.ராஜாங்கம், மாநில அமைப்புசாரா அணி ஏ.ஏ.ஆறுமுகம், மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, மங்கலம் பிரபாகரன், ஜெ.மெய்கண்டன், பொன்.தனுசு, எச்.சாதிக் பாட்சா, கு.கணேஷ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா.கார்த்திகேயன், டாக்டர் பிரவீன்ஶ்ரீதரன், பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு.சர்தார் காசீம், எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு, பி.கே.ஏ.அருண், எல்.ஐ.சி.து.வேலு, இரா.ஜோதி, இரா.அன்பரசு, பவர்.அன்பரசு, நா.மாசிலாமணி, கற்பகம்சரவணன், உ.நித்யா, டாஸ்மாக் ஆறுமுகம்,

ஒன்றியச் செயலாளர்கள் ஆராஞ்சி.ஆறுமுகம், அ.சிவக்குமார், மு.பன்னீர்செல்வம், வி.பி.அண்ணாமலை, சி.சுந்தரபாண்டியன், மெய்யூர். சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராமஜெயம், த.செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, அ.தண்டபாணி, க.பிரபாகரன், டி.கென்னடி, கு. பாலசுப்பிரமணி, கா.சு.இளங்கோவன், அன்பரசிராஜசேகரன்,

நகரச் செயலாளர் மு.அன்பழகன், பேரூர்ச் செயலாளர்கள் சி.கே.அன்பு, ப.முருகையன், எம்.சீனுவாசன், பகுதிப் பொறுப்பாளர்கள் சு.விஜி (எ) விஜியராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண் முகம், பா.ஷெரீப் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளைக்கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

# உன் பெயர் சொல்லாமல் அரசாள இயலாது!

**அ**ண்ணா!

காலவெளியில்
உன் இருப்பு சிறிதுதான்

நீ வாழ்ந்தது
59.4 ஆண்டுகள்

உன் பொதுவாழ்வு
35 ஆண்டுகள்

கட்டியெழுப்பிய கட்சியோடு
19.5 ஆண்டுகள்

ஆட்சிப் பொறுப்பில்
வெறும் 22 மாதங்கள்

ஆனால்,
நீ செய்த சாதனை புரிய
300 ஆண்டு
வாழ்ந்தவனாலும் முடியாது

உன் பெயர் சொல்லாமல்
அரசாள இயலாது
உன் கொள்கை இல்லாமல்
அரசியல் கிடையாது



நீ
சாமானியர்க்காகவே வாழ்ந்தவன்;
சாமானியனாகவே மரித்தவன்

பூமியின் மீது
அதிகச் சிலைகள் புத்தருக்கு;
இந்தியாவில் அம்பேத்கருக்கு;
தமிழ்நாட்டில் உனக்கு

பொன்னடிகளுக்குப்
புகழ் வணக்கம்



கவிப்பேரரசு
**வைரமுத்து**




மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தலைமையிலான தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் தலைமை பணிமனையை கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில், மாவட்ட கழகச் செயலாளர் இல.பத்மநாபன், கழக மகளிர் அணி துணை செயலாளர் முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் முன்னிலையில் கழக முதன்மைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார். இதில் முன்னாள் அமைச்சர் அரா.சக்கரபாணி, பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.ஜெயராமகிருஷ்ணன், மு.ஜெயக்குமார், சீனிவாசன், முன்னாள் மேயர் ந.தினேஷ்குமார் உள்பட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## மதுராந்தகம் இடைத்தேர்தல்: கழக வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமன்

# மதுராந்தகம் தெற்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட கிளைச் செயலாளர்கள் - கழக நிர்வாகிகளைச் சந்தித்தார்!

சென்னை, செப். 16 -

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தல் கழக வேட்பாளரும் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் ஆலோசனையின்படி நேற்று முன்தினம் - அத்தொகுதியிலுள்ள மதுராந்தகம் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட 35 ஊராட்சிகளைச் சேர்ந்த கழகக் கிளைச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளை நேரில் சந்தித்தார்.



இச்சந்திப்பின்போது மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் அப்துல் மாலிக், செய்யூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பனையூர் பாபு ஆகியோர் உடனிருந்தனர்.

கழக வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமன், மதுராந்தகம் தெற்கு ஒன்றியச் செயலாளர் சிவகுமார் முன்னிலையில் அவ்வொன்றியத்திற்கு உட்பட்ட சரவம்பாக்கம், பெருவேலி, நல்லகாமூர், காட்டுத்தேவகாத்தூர், தொன்னாடு, நீர்பெயர், வேட்டூர், ஜமீன் பூதூர், இரும்பேடு, நல்லூர், விராலூர் ஓணம்பாக்கம், பெரிய வெண்மணி, அரியனூர், நெசப்பாக்கம், சின்ன வெண்மணி, நெட்ரம்பாக்கம், ஜமீன் எண்டத்தூர், கீழ்கண்டை, முருகம்பாக்கம், குன்ற த்தூர், வீராணகுன்னம், காவவாத்தூர், தேவவாத்தூர், அருங்குணம், புளியரணங்கொட்டை, அவூரிமேடு, நேத்தப்பாக்கம், சிறுநல்லூர், வில்வராயநல்லூர், கென்றச்சேரி, முன்னூத்தி குப்பம், கினார், சிலாவட்டம், பாக்கம் ஆகிய 35 ஊரட்சிகளிலும்; கழகத்தின் கிளைச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளை நேரில் சந்தித்தார்.